செய்தி வெளியீடு எண்:082 நாள் : 18.02.2015

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழக அரசால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தபபட்டுவரும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் மூலம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் 16.2.2015 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. **கே.டி.ராஜேந்திரபாலாஜி** அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

--------

இன்றைய உலகில் மாணவ சமுதாயத்திற்கு மடிக்கணினி ஒரு இன்றியமையாத கல்விச் சாதனமாக உள்ளது. வளர்ந்து வரும் உலகளாவிய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் மாணவர்கள் பங்கு கொள்ள ஏதுவாக, அவர்களின் திறனை மேம்படுத்துவது அவசியமானது என்பதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கும், அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்க உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2011–12 ஆம் ஆண்டு அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயின்ற 8.67 லட்சம் மாணவ மாணவிகளுக்கும், 2012–13 ஆம் ஆண்டில் 7.18 லட்சம் மாணவ மாணவிகளுக்கும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

மேலும் 2013–14ம் ஆண்டிலும் மடிக்கணினிகள் வழங்க உத்தரவிட்டதன்பேரில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் 5.30 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 21.15 லட்சம் மடிக்கணினிகள் மாணவ மாணவிகள் பெற்று பயனடைந்துள்ளனர். இத்திட்டத்திற்காக இதுவரை 2781.75 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசு இவ்வாண்டு (2014–15), 5.50 லட்சம் மடிக்கணினிகளும், 2015–16 ஆம் ஆண்டில் 5.50 லட்சம் மடிக்கணினிகளும் என ஆக மொத்தம் 11.00 லட்சம் மடிக்கணினிகளை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் வழங்க

உத்தரவிட்டுள்ளது. 2014–15ம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.1100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, இவ்வாண்டு (2014–15), 5.50 லட்சம் மடிக்கணினிகளை கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு பணிகளை விரைந்து முடித்து விரைவில் மாணவ மாணவியர்களுக்கு முழுமையாக வழங்கிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள்.

மேலும், அனைத்து மாவட்டங்களில் விநியோகிக்கப்படவிருக்கும் மடிக்கணினிகளின் எண்ணிக்கை, சேவை மையங்கள், தர உறுதிப்பாடு மற்றும் மடிக்கணினிகளை பாதுகாப்பு செய்தல், வைப்பதற்கான அறைகள் மற்றும் விநியோகம் செய்தல் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டு, ஆலோசனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், தகவல் தொழில்நுட்ப செயலாளர் மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை செயலாளர் (பொறுப்பு), திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திரு ப்ரவீண் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு அதுல் ஆனந்த், இ.ஆ.ப, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன், மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

------

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9